**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

O.S. No. 4 of 2018

பெயர் : திரு.T.மோகன்தாஸ்

5.8.2025

**பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் தற்போது 2 மற்றும் 3ஆம் பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேனா என்று கேட்டால், இல்லை எனக்காக மட்டும்தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் 43 ஆண்டுகளாக வழக்கறிஞராக தொழில் புரிந்துவருகிறேன். என் தம்பியான 2ஆம் பிரதிவாதி திரு.சிவதாசும் 1989ஆம் ஆண்டுமுதல் வழக்கறிஞராக தொழில் புரிந்துவருகிறார். இவ்வழக்கை என் கூடபிறந்த அக்காவான 1ஆம் வாதி வசந்தா ராகவனும், என் கூடபிறந்த தங்கையான 2ஆம் வாதி சோபனா தேவியும் தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் என் அம்மாவின் சொத்தில் பாகப்பிரிவினை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள், ஆனால் தாவா சொத்து என் அம்மாவின் சொத்து இல்லை. தாவா சொத்து ஆவண எண் 1625/1969ல் கண்டுள்ள சொத்து என்று சொன்னால், ஆமாம். ஆவண எண் 1625/1969 இவ்வழக்கில் Exhibit A1 மற்றும் Exhibit B2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. Exhibit A1 ஆவணத்தில் கிரையம் பெற்றவர்களாக என் அம்மா மற்றும் என் அப்பா பெயர்தான்

இருக்கிறது என்று சொன்னால், ஆமாம், ஆனால் அச்சொத்தை என் அப்பாதான் கிரையம் பெற்றார், மேலும் அக்கிரைய பத்திரத்தில் either or survivor என்று preamble மற்றும் bodyல் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் Exhibit B2 கிரைய பத்திரத்தில் bodyல் either or survivor என்ற வாசகங்கள் இருக்கிறதா என்று கேட்டால், அவ்வாறு குறிப்பாக இல்லை.

என் அம்மா 22.9.2004ஆம் தேதி இறந்துபோனார். எங்கள் அம்மா இறந்தபிறகு அவருடைய குழந்தைகளான வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே எழுத்துபூர்வமான பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்று கேட்டால், ஏற்படவில்லை, ஆனால் என் அம்மா இறந்தபிறகு அக்டோபர் முதல் வாரத்தில் பிரதிவாதிகளுக்கும், எங்கள் அப்பாவிற்கும் இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது. அந்த வாய்மொழி பாகப்பிரிவினை 2004ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் எங்கள் வீட்டில் வைத்து ஏற்பட்டது, ஆனால் தேதி ஞாபகம் இல்லை. அந்த வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டபோது எங்கள் வீட்டில் யார்யார் இருந்தார்கள் என்று கேட்டால், அப்பாவும், வாதிகளும், பிரதிவாதிகளும், எங்கள் சொந்தகாரர்களும் இருந்தார்கள். அப்போது எந்த சொந்தகாரர்கள் இருந்தார்கள், அவர்கள் பெயர் என்ன என்று கேட்டால், கருமாந்திரம் முடிந்து நிறைய சொந்தகாரர்கள் இருந்தார்கள், இரண்டு மாமாக்களும், மாமா பசங்களும் இருந்தார்கள். M.A.ராகவன், M.A.பாலசுப்ரமணியன்

ஆகிய இரண்டு மாமாக்கள் இருந்தார்கள், அவர்களில் தற்போது M.A.ராகவன் இறந்துவிட்டார். அந்த வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டபோது இருந்த மற்ற சொந்தகாரர்கள் பெயர் ஞாபகம் இருக்கிறதா என்று கேட்டால், என் சின்னம்மா M.A.லீலாவதி இருந்தார், ஆனால் அவரும் இறந்துவிட்டார். வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக இவ்வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொல்வது தவறாகும்.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.08.05 17:14:18 +0530